பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 02 2025 **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அமெரிக்காவில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப்பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. திமுக ஆட்சியில் அரசு பள்ளிகளின் தரம் சரிவினை கண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. தமிழகம் அனைத்துத்துறைகளிலும் முதன்மையாக விளங்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு திமுக அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. சமூக நீதிக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டு வருவதாக பாமக குறை கூறியுள்ளது.

5. ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் தாம் மேற்கொண்ட அரசுமுறைப்பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு புதுதில்லி திரும்பும் வழியில் சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

எரிசக்தி முதல் கல்வி வரை, வர்த்தகம் முதல் தொழில்நுட்பம் வரை, செயற்கை நுண்ணறிவு முதல் விண்வெளி ஆராய்ச்சி வரை பல்வேறு பிரச்சினைகள் குறித்து அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்புடன் தாம் விவாதித்தாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பான காணொலி ஒன்றையும் பிரதமர் வெளியிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

லக்னோவில் பல்வேறு சாலை மேம்பாட்டுத்திட்டப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளை மேமம்படுத்துவதற்காக கடந்த பத்தாண்டுகளில் 28 லட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி, சர்வதேச தரத்திற்கு இணையான சாலை வசதிகள் நம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

திமுக ஆட்சியில் அரசு பள்ளிகளின் தரம் சரிவினை கண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நீலகிரி மாவட்டத்தில் 15 மாணவர்களுக்கும் குறைவாக இருக்கும் பள்ளிகளின் விவரங்களை தொடக்கக்கல்வி அலுவலர் சேகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, 85-க்கும் மேற்பட்ட தொடக்கப்பள்ளிகளை அடுத்த மாதத்திற்குள் மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட பள்ளிகளில் பயில்வோர்களை வேறு பள்ளிகளில் சேர்க்குமாறு அறிவுறுத்தப்படுவதாகவும், இதன் காரணமாக விளிம்பு நிலை மக்களின் கல்வி, அடிப்படை உரிமை தடைபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து வசதிகள் அற்ற மலை கிராமங்களில் அரசு பள்ளிகள் மட்டுமே மக்களின் நம்பிக்கையாக இருக்கும் நிலையில், அவற்றை எப்படி மூட முடியும் என்றும் அவர் வினவியுள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடும் இந்த போக்கினை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திரு எல். முருகன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பாக நாளிதழில் வெளியான செய்தியை சுட்டிக்காட்டி முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், ஆளுநருக்கு எதிராக தவறான கருத்துக்களை சமூக வலைதளத்தில் பரப்புவது துரதிருஷ்டவசமானது என்று ஆளுநர் மாளிகை குறை கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உயரிய பதவியை வகிக்கும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், இதுபோன்ற செயலில் ஈடுபடுவது நிர்வாக திறமையின்மை மற்றும் தோல்வியை மறைப்பதற்கான நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தமிழக மக்கள் புத்திசாலிகள் என்றும், அவர்களை ஏமாற்ற முடியாது என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

<<<<<<>>>>>>

தமிழகம் அனைத்துத்துறைகளிலும் முதன்மையாக விளங்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு திமுக அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, திமுக கட்சித் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் பல்வேறு அமைப்புகள் வெளியிடும் புள்ளி விவரங்களில் தமிழகம் பல்வேறு இலக்குகளில் சிறந்து விளங்குவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், தமிழகத்திற்குரிய நிதி பங்களிப்பை மத்திய அரசு வழங்கவில்லை என்றும் திரு மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

போக்குவரத்துக்கழக தொழிலாளர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து நிதித்துறையுடன் கலந்தாலோசனை செய்து முடிவெடுக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, சென்னை குரோம்பேட்டையில் ஊழியர் சங்க பிரதிநிதிகளுடன் இரண்டாவது நாளாக இன்று பேச்சு நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக முடிவெடுத்தபின்னர் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சமூக நீதிக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டு வருவதாக பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்துவரும் நிலையில், அதற்கான எந்த முயற்சியும் தமிழக அரசு மேற்கொள்வதாக தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாக்க வேண்டும் என்பதிலும் திமுக அரசு அக்கறையின்றி செயல்படுவதாக அவர் கூறியுள்ளார்.

அண்டை மாநிலமான தெலங்கானாவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறிவருவது ஏற்புடையது அல்ல என்றும் திரு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பாம்பன் புதிய ரயில் பாலத்தில் தெற்கு ரயில்வேயின் பொது மேலாளர் திரு ஆர் என் சிங் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த பாலத்தில் ரயில்களை இயக்கி சோதித்து பார்க்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – கார்த்திகேயன் – 45 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், பொதுத்தேர்வு தொடர்பாக மாணவர்களின் அச்சத்தை களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடிய நிகழ்ச்சியில் பங்கேற்ற **Domnic Geoffray**-வுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

மதுரை திருப்பரங்குன்றத்தில் ஆந்திரா துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் இன்று சுவாமி தரிசனம் செய்தார்.

--------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் பிரிதிவிமங்கலத்தில் ஏழு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா மாளிகையை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு இன்று திறந்துவைத்தார்.

----------------------

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே இருஞ்சிறை கண்மாயை ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கும் பணியை நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று தொடங்கிவைத்தார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

---------------

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி பேருந்து நிலையத்தில் புல்வாமா தாக்குதலில் வீரமரணமடைந்த துணை ராணுவப்படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

----------------

அரியலூர் மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை ஆன்லைன் மூலம் விற்பனை செய்ய முன்வர வேண்டும் என்று ஆட்சியர் திரு ரத்னசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

ராமநாதபுரம் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

---------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரயில் மூலம் கடத்தி வரப்பபட்ட போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

கோவை மாவட்டம் ஆனைமலை மாசாணியம்மன் குண்டம் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஹாங்காங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 4-0 என்ற ஆட்டக்கணக்கில் ஹாங்காங்கை வென்றது.

--------------

தேசிய விளையாட்டுப்போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைந்தன.

உத்தராகண்டின் **Haldwani** –ல் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு மன்சுக் மாண்டவியா பங்கேற்று விளையாட்டு வீரர்களை கௌரவித்தனர்.

இப்போட்டியில், 68 தங்கம், 26 வெள்ளி, 27 வெண்கலப்பதக்கங்களுடன் சர்வீஸஸ் அணி முதலிடத்தை பிடித்தது.

மகாராஷ்ட்ரா 54 தங்கம், 71 வெள்ளி, 76 வெண்கலப்பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தையும், 48 தங்கம் உட்பட 153 பதக்கங்களுடன் ஹரியானா மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

27 தங்கம் உட்பட 92 பதக்கங்களுடன் தமிழகம் ஆறாவது இடத்தை பிடித்தது.

தில்லி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Kaliyanda Poonacha -** ஜிம்பாப்வேயின் **Courtney John Lock** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

----------------

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு 19 கோடியே 45 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று ஐ சி சி அறிவித்துள்ளது.

***<<<<<<END>>>>>>***